**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous
Priliminary Register
Sessions

CC.No.178 of 2016

Depostitions of Prosecution witness for

Prosecutuion PW5
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | பாண்டியன் |
| Husband /Father name | : | ராஜாங்கம் |
| Village | : | கொண்டாயிருப்பு |
| Taluk | : | |
| Calling | : | PW5 (LW6 ) |
| Religion | : | |
| Age | : | 65 |

**1, 2** எதிரிகள் ஆஜர். **1, 2** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். கு,வி.மு.ச. பிரிவு **311** ன் படி தாக்கல் செய்யப்பட்ட **MP. 2/2026** ல் பிறப்பிக்கப்பட்ட **25.06.2026** தேதியிட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சி **காட்டுமன்னார்கோயில் காவல்நிலைய** பெண் தலைமை காவலர் திருமதி. ஆஷா **1268 WHC என்பவரால் அடையாளம் காட்டப்பட்டார்.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 25th day of June 2026

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளும் அ.சா.1 கனவள்ளியும் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் பிரச்சனை நடந்தது தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால்

சரிதான். யார் யாரை அடித்துக்கொண்டார்கள் என்றும் யார் பொருட்களை சேதப்படுத்தினார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்துறையில் விசாரித்தபோதும் அவ்வாறு தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. )**

**அரசுதரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஏற்கெனவே நீதிமன்றத்தில் நடந்த சம்பவத்தை நான் சென்று பார்த்தபோது என்ன நிலையில் இருந்தது சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இருதரப்பினரும் சமாதானம் ஆகிவிட்டனர் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேன். நானும் அதில் கையொப்பம் செய்துள்ளேன். நடந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றாலும் யார் யாரை தாக்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

Signature of witness

**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No.178 of 2016
Priliminary Register
Sessions

Prosectuion PW1

Depostitions of Prosecution witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கனகவள்ளி |
| Husband /Father name | : | கணேசன் |
| Village | : | கொண்டாயிருப்பு |
| Taluk | : | |
| Calling | : | PW 1 (LW 1 ) |
| Religion | : | |
| Age | : | 36 |

**1, 2** எதிரிகள் ஆஜர். **1, 2** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். கு,வி.மு.ச. பிரிவு **311**ன் படி தாக்கல் செய்யப்பட்ட **MP. 2/2026**ல் பிறப்பிக்கப்பட்ட **25.06.2026** தேதியிட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சி **காட்டுமன்னார்கோயில் காவல்நிலைய** பெண் தலைமை காவலர் திருமதி. ஆஷா **1268 WHC என்பவரால் அடையாளம் காட்டப்பட்டார்.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 25th day of June 2026

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் எனக்கு உ றவினர்கள் என்றால் சரிதான். நான் புகாரிலும், இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போதும் வழக்கு சம்பவம் இரவு நேரத்தில் நடந்ததாக தான்

சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த நேரத்தில் வெளிச்சம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் டேப்ரெக்கார்டர் சத்தம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். அந்த நேரத்தில் நான் வெளியே வந்தபோது கும்பலில் இருந்தபோது என்னையும் எனது சகோதரிகளையும் தாக்கிவிட்டனர் என்றால் சரிதான். அதில் இந்த எதிரிகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்கள் மீதுள்ள சந்தேகத்தின் அடிப்படையில் புகார் அளித்து சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வீட்டில் இருந்த பொருட்கள் சேதமானது யாரால் ஏற்பட்டது என்று தெரியாது என்றாலும் எதிரிகள் மீதுள்ள சந்தேகத்தின் அடிப்படையில் அவர்கள் மீது புகார் அளித்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். பின்னிட்டு விசாரித்தபோது எதிரிகள் எங்களை தாக்கவோ, திட்டவோ, மிரட்டவோ, வீட்டில் உள்ள பொருட்களை சேதப்படுத்தவோ, எங்களை கொடுமைப்படுத்தவோ இல்லை என்பதை தெரிந்து கொண்டேன்.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. )**

**அரசுதரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்களை திட்டவோ தாக்கவோ, மிரட்டவோ இல்லை என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சில நாட்களுக்கு முன்பு தெரிந்து கொண்டேன். ஏற்கெனவே நடந்த விபரத்தை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் தான் எதிரிகள் எங்களை திட்டவோ, தாக்கவோ, மிரட்டவோ இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

Signature of witness